1972 டிசம்பர் 13]

* 145 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state--

(a) whether B.Com. Degree Course is to be introduced in Government Polytechnics in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) தற்போது மகளிர் பல்தொழிற் பயிற்சிக் கூடங்களில் மூன்று ஆண்டு படிப்பு கொண்ட வணிக இயல் பட்டயப் படிப்பு நடத்தப்பட்டு வருகிறது. இதைத் தொடர்ந்து ஒரு ஆண்டு பி.காம். பட்டயப் படிப்பு நடத்தப்படுவது பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

செவிலியர் பயிற்சி.

* 146 வினு—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ஆம் ஆண்டு, சென்னையில் நர்சு பயிற்சிக்காக சேர்க்கப்பட்ட பெண்கள் எத்தனை பேர்?

(இ) ஆண்கள் எத்தனை பேர்?

(உ) அவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 65.

(இ) ஒருவருமில்லை.

(உ) அவர்களது பயிற்சிக் காலம் இன்னும் முடியவில்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்போது கிராமப் புறங்களில் அல்லது தாலூக்கா தலைநகரில் உள்ள ஹாஸ்பிடல்களில் போதிய நர்ஸ் வசதியில்லை, குறைவாக இருக்கிறது என்று அறியப் படுகிறது. அதற்காக இன்னும் அதிகமான பெண் நர்ஸ்கள் சேர்க்க வசதி செய்யப்படுமா? ஆண்கள் நர்ஸ் பதவிக்குச் சேர்க்கப் படுவதில்லை என்பதற்கான காரணத்தையும் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, செவிலியர் களாக பணியாற்றுவதற்குப் பெண்கள் தான் அதிகமான சிறப்புத் தகுதியை இயல்பாகப் பெற்று இருக்கிறார்கள். செவிலியர்களாகப்

பணியாற்றுவதற்குரிய அந்தச் சிறப்பு இயல்பு ஆண்களிடத்தில் அவ்வளவாக இல்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். ஆகவே, சில ஆண்டுகளாக ஆண்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. பயிற்சி பெற்ற பெண்களின் எண்ணிக்கை குறைவாக இல்லை. ஏறத்தாழ 500 பேர் பயிற்சி பெற்றவர்கள் இப்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஆகவே, பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, 1971-ல் பயிற்சி பெற்ற பல பேர் வேலையில்லாமல் இருப்பதால், அந்தத் துறையில் பயிற்சி தருவதை ஒத்தி வைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சிலவிதமான பயிற்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். அதே நேரத்தில் அதிகமான பேர்கள் வேலையில் இல்லாமல் இருக்கும் நிலையையும் உண்டாக்கக் கூடாது. எனவே தான் ஏறத்தாழ சில ஆண்டுகளுக்கு முன்பு 200 பேர் பயிற்சி பெற்று வந்தார்கள். அதை 125 ஆகக் குறைத்து இப்போது பயிற்சி தரப்பட்டு வருகிறது. பயிற்சி பெறுகிறவர்கள் பயிற்சியின் போதே பணியாற்றுகிற வாய்ப்பு இருப்பதால் —கல்லூரிகளில், மருத்துவமனைகளில்—பயிற்சியும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பயிற்சி 3½ ஆண்டுக் காலம் தரப் படுகிறது. இந்தப் பயிற்சியின் விளைவாக அவர்களுக்கும், அந்தத் துறையைச் சார்ந்த அந்தப் பணிக்கும் உதவிகரமாக இருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : துணைத் தலைவரவர்களே, மருத்துவ மனைகளில் செவிலியர்களின் எண்ணிக்கை போதாது என்று சொல்லப் படுகிறதே, அதை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒவ்வொரு மருத்துவ மனையிலும் எந்த அளவுக்கு அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு அவ்வப்போது செய்யப் பட்டு வருகிறது.

Conservancy work at Madras.

* 147 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether bullock carts used for conservancy work at Madras are to be given up; and

(*b*) if so, the details thereof?